**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**27 நவம்பர் 2015 / 15 ஸஃபர் 1437**

# <u>ஓய்வு நேரத்தை நமது பிள்ளைகளின் நடத்தைகளைச் சீராக்குவதற்காகப் பயன்படுத்துவது</u>

الْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْراً وَنَذِيْرًا
وَدَاعِياً إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجاً مُنِيْراً وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْماً كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!). புனிதமிக்க இந்த வெள்ளிக்கிழமையில் இங்கு ஒன்று கூடுவதற்கு நம்மனைவருக்கும் வாய்ப்பளித்த அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" (பக்தியை) அதிகரித்துக் கொள்வதன் மூலமாகவும், அல்லாஹ்வின் கட்டளைகளைப்

புறக்கணிக்கமாட்டோம்; அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகளை மீறமாட்டோம் என உறுதிமொழி எடுத்துக் கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வோமாக!

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

கடந்த பல வாரங்களாக, நமது குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினர் முதற்கொண்டு, சமுதாயத்தின் அனைத்து மக்களும் சன்மார்க்கக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பைத் தவற விடக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கான அவசியத்தைப் பற்றி நினைவூட்டப்பட்டோம். காரணம், நமது குடும்பத்தார்கள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமானிதமாக உள்ளார்கள். அவர்களைப் பற்றி மறுமையில் நாம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் கேள்வி கேட்கப்படுவோம். நம்மில் ஒவ்வொருவரும் நமது கண்காணிப்பு மற்றும் பொறுப்பின் கீழ் உள்ளவர்களைப் பற்றி விசாரிக்கப்படுவோம்.

எனவே, ஜமாஅத்தார்களே! நாம் நம்மைப் பற்றி சில நொடிப் பொழுது சிந்தித்துப் பார்ப்போமாக! நாம் பெற்றோர்கள் எனும் ரீதியில் நமது கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோமா? நமது பிள்ளைகளுக்கு, அவர்களின் வரும் காலத்தில் பயன் தரும் கல்வியறிவை அவர்கள் பெறுவதற்குப் போதுமான பண உதவியைச் செய்துள்ளோமா? அவர்களோடு பொழுதுகளைப் போக்கினால் போதுமாகுமா? அல்லது, குறிப்பாக, கல்விக்கூடங்களின் இவ்விடுமுறை நாட்களில் நம்மால்

வித்தியாசமாகப் பங்காற்ற முடியுமா? எனச் சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும்.

மேற்கண்ட கேள்விகளுக்குப் பதில் பெறும் வகையில், அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா திருக்குர்ஆனின் "அத்-தஹ்ரீம்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 6-வது வசனத்தில் வழங்கியுள்ள வழிகாட்டுதலை அறிய முயல்வோமாக!:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ قُوٓاْ أَنفُسَكُمۡ وَأَهۡلِيكُمۡ نَارٗا وَقُودُهَا ٱلنَّاسُ
وَٱلۡحِجَارَةُ عَلَيۡهَا مَلَٰٓئِكَةٌ غِلَاظٞ شِدَادٞ لَّا يَعۡصُونَ ٱللَّهَ مَآ أَمَرَهُمۡ
وَيَفۡعَلُونَ مَا يُؤۡمَرُونَ ٦

பொருள்: ஓரிறை நம்பிக்கை கொண்டவர்களே! மனிதர்களும் கற்களும் எரிபொருள்களாகக்கூடிய அந்த நரக நெருப்பிலிருந்து உங்களையும் உங்கள் மனைவி மக்களையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதன் மீது, கடும் சீற்றமுடைய வானவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஒருபோதும் மாறு செய்வதில்லை. அவர்களுக்கு எந்தக் கட்டளை இடப்பட்டாலும் அதனை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள்.

மேற்கண்ட வசனத்தில், நரக நெருப்பில் விழுவதிலிருந்து நம்மையும் நமது குடும்பத்தார்களையும் பாதுகாத்துக் கொள்வதன் அவசியத்தை

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு நினைவூட்டுகிறான். மேலும், நமது மற்றும் நமது குடும்பத்தார்கள், பிள்ளைகளின் "ஈமான்" எனும் ஓரிறை நம்பிக்கையைப் பலப்படுத்துவதன் அவசியத்தைப் பற்றியும் மேற்கண்ட வசனம் நமக்கு நினைவூட்டுகின்றது. அல்லாஹ்வையும் இஸ்லாத்தையும் நமது பிள்ளைகள் அறியும் வகையிலும், நமது பிள்ளைகளிடம் "அக்லாக்" (நன்னடத்தைகளை) ஏற்படுத்தும் வகையிலும் நமது பிள்ளைகளுக்கு "தர்பியத்" (பயிற்றுவிப்பதில்) நாம் முழு கவனம் செலுத்த வேண்டும்.

உண்மையில், பிள்ளைகள் பெரியவர்களாக ஆன பின்பு கூட அவர்களைப் பேணி வளர்ப்பது, பயிற்றுவிப்பது அவசியம் என ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். ஒருமுறை தனது மகள் பாத்திமா (ரலி) அவர்களை நோக்கி நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

"(மதீனாவிலுள்ள) "உஹது மலை" தங்கமாக மாற்றப்பட்டு எனக்கு வழங்கப்பட (அல்லாஹ்வின் புறத்திலிருந்து) வாக்குறுதி வழங்கப்பட்டது. எனினும், அதை விட, மறுமையில் எனது குடும்பத்தார்கள் நலன் பெற வேண்டுமென்பதையே நான் தேர்ந்தெடுத்தேன்"

பிறிதொரு ஹதீதில் ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றார்கள்:

"அல்லாஹ்வின் மீது சத்தியமாகக் கூறுகிறேன்: முஹம்மதுடைய மகள் பாத்திமா திருடினாலும் அவளது கையையும் வெட்டுவேன்" (ஹதீது நூல்கள்: புகாரி & முஸ்லிம்)

மேற்கண்ட இரண்டு ஹதீதுகளும், தமது பிள்ளைகள் இவ்வுலக வாழ்க்கையில் மட்டுமல்ல, நிரந்தர வாழ்க்கையாகிய மறுமை வாழ்க்கையிலும் வெற்றி பெறுவதற்கு, பெற்றோர்கள் பயிற்றுவிப்பது அவசியம் எனச் சுட்டிக் காட்டுகின்றன. இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள், தனது பிள்ளைகளைப் பேணி வளர்த்து, பயிற்றுவிக்கும் பணியை (தர்பியத்) அப்பிள்ளைகளின் சிறுவயதிலிருந்தே துவங்கி விட்டார்கள். ஒரு பிள்ளை, தன்னைப் படைத்தவனை அறியும் போது, நன்மை, தீமைகளைப் பிரித்து அறியும் ஆற்றலைப் பெறும் போது, அப்பிள்ளை இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைவது எளிதாகி விடும். இன்னும் சில ஹதீதுகளில்: இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தனது மகள் செய்யிததினா பாத்திமா (ரலி) அவர்களை, செய்யிதினா அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்த பின்பு கூட, அடிக்கடி மகளைச் சந்தித்து உபதேசம் செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் பிள்ளைகளை உண்மையாக நேசித்தார்கள். அவர்களோடு நேரங்களைச் செலவழித்தார்கள். அவர்களின் மனக்குறைகளைக் கேட்டார்கள். அவர்களை அல்லாஹ்வின் பாதையின் பால் அழைத்துச் சென்றார்கள்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நமது பிள்ளைகளுடன் நேரங்களைக் கழித்து, அவர்களுக்குப் பயிற்றுவிப்பதற்காக இவ்விடுமுறைக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். குடும்ப நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் அப்பிள்ளைகளுக்கு நெருக்கமாக ஆகுவதற்கு முயலுங்கள். அவர்களோடு

பயனுள்ள வகையில் உரையாடுங்கள். அவர்களை நன்கு புரிந்து கொண்டு, அவர்களின் மனக்குறைகளை, கருத்துக்களை, சிந்தனைகளைக் கேளுங்கள். அவர்களின் முன்னேற்றத்தையும், அவர்களது விரைவான வாழ்க்கை முறையின் மாற்றங்களையும் அறிய முற்படுங்கள்.

பதின்ம வயதுப் பிள்ளைகளுடன் பழகும் போது, அவர்களின் அறிவாற்றலையும் முதிர்ச்சியையும் ஏற்றுக் கொள்ளுங்கள்; தேவைப்படும் போது அவர்களுக்கு வழிகாட்டுங்கள். அவர்களின் நடத்தைகளோ அல்லது செயல்களோ நமக்கு கவலை தருவதாக இருந்தால் அவர்களோடு விவாதிப்பதற்கும், அப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் சரியான நேரத்தைத் தேர்வு செய்யுங்கள். திருக்குர்ஆனிலும், திரு நபி(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" எனப்படும் வழிமுறையிலும் காணப்படும் பல உபதேசங்களைக் கவனத்தில் கொண்டு செயல்படுங்கள்.

எதிர்மறையான, தீங்கான சக்திகளிலிருந்தும், இஸ்லாத்தைப் பற்றிய தவறான விளக்கங்கள், தவறான பிரதிநிதித்துவம் போன்றவற்றிலிருந்தும் நமது பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக இஸ்லாத்தை உண்மையாகப் புரிந்து கொள்ளும் ஆற்றலை அப்பிள்ளைகளிடம் ஏற்படுத்துங்கள். இவ்விஷயத்தில் நாம் அவர்களுக்கு முறையாக வழிகாட்டத் தவறினால் கடுமையான எதிர் விளைவுகள் ஏற்படுவதை நாம் காணலாம். இஸ்லாத்தைப் பற்றிய தவறான புரிந்துணர்வு அவர்களிடம் ஏற்பட்டு, அதன் காரணமாக தீவிரவாதச் சிந்தனைகளால் அவர்கள் கவரப்படும் வகையில் அவர்களை நாம் விட்டு விடக் கூடாது.

நமது பிள்ளைகளிடம் இஸ்லாமியக் கல்வியறிவை அதிகரிப்பதற்காக, பள்ளிவாசல்கள் மூலம் நடத்தப்படும் aLIVE நிகழ்ச்சிகள், தனியார் இஸ்லாமியக் கல்வி நிறுவனங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்படும்

விடுமுறைக் கால நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொள்வதற்கு நமது பிள்ளைகளை ஆர்வமூட்டுவோமாக! பல்வேறு விடுமுறைக் கால நிகழ்ச்சிகளை விரிவாக அறிவதற்கு www.tarbiyah.net எனும் இணையதளத்தை அணுகலாம். aLIVE நிகழ்ச்சிகளை Facebook ல் காணலாம்.

இவ்விடுமுறைக் காலங்களில், நமது பிள்ளைகள் விஷயத்தில் இன்னும் நாம் சிறப்பாகச் செயல்பட முடியும். ஒவ்வொரு பிள்ளையிடத்திலும் பல்வேறு சக்திகளும் திறமைகளும் காணப்படுகின்றன. எனவே, நமது பிள்ளைகளுக்குப் பயிற்றுவிப்பதற்கு சிறந்த வழிகள் யாவை, அவர்களிடம் எவ்வாறு நல்ல விளைவுகளை ஏற்படுத்தலாம் என உங்கள் வாழ்க்கைத் துணைவியருடன் இணைந்து அறிவுப்பூர்வமாகத் திட்டமிடுங்கள். உதாரணமாக, குடும்பத்துடன் விடுமுறையில் செல்லும் வாய்ப்பை, குடும்பத்தார்களுடன் இணைந்து "இபாதத்" (வணக்க வழிபாடு) களில் ஈடுபடுவதற்கான அரிய வாய்ப்பாகப் பயன்படுத்தலாம். விடுமுறைக் காலம், ஓய்வுக் காலம் அல்லாத, அலுவல்மிக்க மற்ற காலங்களில் நம்மால் தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுக முடியவில்லையெனில், இரவுப் பொழுதில் "தஹஜ்ஜத்" தொழுக முடியவில்லையெனில், விடுமுறைக் காலம் மற்றும் வேலைகளிலிருந்து ஓய்வாக இருக்கும் காலங்களில் அவ்வாறு செய்வதற்கு முயற்சிக்கலாம். விடுமுறைக் காலங்களில் நாம் எங்கு செல்கின்றோமோ அவ்விடங்களில் சமுதாய முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களில் பங்கு பெறலாம். அந்நிலையில், நமது விடுமுறைக் காலம் பயனுள்ளதாக அமையும். குடும்பத்தார்கள் அனைவரும் தம்மை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பக்கம் நெருக்கமாக்கிக் கொள்ள முயலும் போது,

அவர்களுக்கு மத்தியிலான உறவை அல்லாஹ் பலப்படுத்துவான். குடும்பத்தார்களுக்கு மத்தியிலான உறவும், அவர்களுக்கும் அல்லாஹ்வுக்கும் மத்தியிலான உறவும் முன்னேற்றம் காணும்.

நமது அனைத்து முயற்சிகளும், வழிகாட்டுதல்களும், பிள்ளைகளுக்காக நாம் ஒதுக்கும் நேரமும் நமது பிள்ளைகளை நேர்மையானவர்களாகவும், நமது கண்களுக்குக் குளிர்ச்சி தருபவர்களாகவும் ஆக்கட்டுமாக! இஸ்லாத்திற்கும், தமது பெற்றோர்களுக்கும் சமுதாயம் மற்றும் நாட்டிற்கும் ஆக்கப்பூர்வமான வகையில் பங்காற்றுபவர்களாக நமது பிள்ளைகள் ஆகட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.